RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 213 | ஆகஸ்டு.8 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# கர்நாடகா செல்ல முடிவெடுத்தது ஏன்? உதயநிதி கேள்விக்கு முதல்வர் விஜய் பதில்





சென்னை: ஆக.8-

கர்நாடகா செல்ல முதல்வர் விஜய் முடிவெடுத்தது ஏன் என்று சட்டப்பேரவையில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேள்வி எழுப்பினார். அதற்கு உடனடியாக முதல்வர் விஜய் பதிலளித்தார்.

சட்டப்பேரவையில் இன்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "தமிழ்நாடு விவசாயிகளின் வேதனைக்கு இந்த அரசு சரியான தீர்வை காண வேண்டும் என இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை அளித்துள்ளோம். இந்த தீர்மானத்தை கொண்டுவர நான்கு காரணங்கள் உள்ளன. முதல் காரணம், மேகேதாட்டு அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை தடுக்க இந்த அரசு எடுத்த நடவடிக்கை குறித்து இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டும். இரண்டாவது காரணம், முழு பயிர்க்கடன் தள்ளுபடி என தேர்தல் வாக்குறுதி கொடுத்துவிட்டு ஆட்சிக்கு வந்துவிட்டு அரைகுறை தள்ளுபடி செய்வது ஏன்?.

மூன்றாவது காரணம், காவிரியில் தண்ணீர் வராத காரணத்தால் குறுவை சாகுபடி இன்று இல்லாமல் போய்விட்டது. இதற்கு தகுந்த நிவாரணத் தொகையை இந்த அரசு எப்போது விவசாயிகளுக்கு கொடுக்கப் போகிறது?. நான்காவது காரணம், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை கொடுக்க வேண்டும்.

தவெக ஆட்சி அமைந்தது முதல் மேகேதாட்டு அணை கட்டுவதில் இதுவரை காட்டாத வேகத்தையும், தீவிரத்தையும் கர்நாடக அரசு காட்டி வருகிறது. இதற்காக ஒரு முறை மட்டும் பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை வைத்தார். மேகேதாட்டு விவகாரத்தில் ஜூன் 19ல் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றியது. தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் போதாது, அனைத்துக் கட்சி தலைவர்களுடன் டெல்லிக்கு செல்ல வேண்டும் என்று நாங்கள் ஆலோசனை சொன்னோம். அப்போதுதான் நாம் ஒற்றுமையாக இருக்கிறோம் என காட்ட முடியும்.

திமுக மட்டுமல்ல அனைத்துக் கட்சிகளும் மேகேதாட்டு விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என கோரிக்கை வைக்கின்றன. கர்நாடக முதல்வரும், அந்த அரசும் மிகவும் வேகமாக செயல்பட்டு வருகின்றன.

மத்திய நிதியமைச்சர், ஜல்சக்தி துறை அமைச்சர் உள்ளிட்டோரை கர்நாடக முதல்வர் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் மேகேதாட்டு அணை கட்ட தமிழக அரசின் அனுமதி தேவையில்லை என சொல்லியுள்ளார். அதன்பின்னர் கர்நாடகாவில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தை முதல்வர் சிவகுமார் கூட்டியுள்ளார். இப்படி கடந்த ஒரு மாதத்தில் படிப்படியாக பல நடவடிக்கைகளை கர்நாடக அரசு எடுத்துள்ளது.

இப்படி மாநில நலன் என வந்தால் கட்சி வேறுபாடுகளை கடந்து எப்படி கர்நாடகாவில் ஓரணியில் நிற்கிறார்களோ, அதே போல நாமும் நிற்க வேண்டும் என சொல்கிறோம். ஏன் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்ட மறுக்கிறீர்கள் என்பதுதான் என் கேள்வி. நாங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்த பிறகு ஜூலை 28ல் இரண்டாவது கடிதத்தை பிரதமருக்கு முதல்வர் எழுதியுள்ளார். மு.க.ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது பிரதமருக்கு கடிதம் எழுதியதை இப்போதைய முதல்வர் விமர்சித்துள்ளார்.

இந்த அரசு ஒரு புது டெக்னிக்கை கடைபிடிக்கிறது. ஏதாவது ஒன்றை செய்வதற்கு முன்பு அதனை கசிய விடுகிறார்கள். முதல்வர் விஜய் கர்நாடகா செல்கிறார் என வேளாண் துறை அமைச்சர் முதலில் தெரிவித்துவிட்டு, பிறகு மறுத்துப் பேசினார். பிறகு 2 அமைச்சர்கள் அதிகாரப்பூர்வமாக எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். பின்னர் 13 பேர் கொண்ட குழு செல்வதாக சொன்னார்கள்.

அதன்பின்னர் , தமிழக முதல்வர் இங்கே வரவேண்டாம், தண்ணீர் கொடுக்க முடியாது என கர்நாடக முதல்வர் சொல்லிவிட்டார். தமிழக முதல்வர் கர்நாடகா செல்ல இருந்தாரா? அப்படியானால் அவர் ஏன் செல்லவில்லை? இதற்கு முதல்வர் பதில் சொல்லவில்லை. முழு பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகளை சந்தித்து முதல்வர் பேசவேண்டும். எங்கள் ஆட்சியில் 6.5 லட்சம் ஹெக்டர் குறுவை சாகுபடி நடந்தது. இந்த ஆட்சியில் 1.5 லட்சம் ஹெக்டேர் தான் சாகுபடி நடந்தது. குறுவை தொகுப்பு எத்தனைப் பேருக்கு வழங்கியுள்ளார்கள் என்பதை தெரிவிக்கவேண்டும்" என்றார்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் விஜய், "காவிரி நமக்கு உயிர் ஆதாரம். காவிரி விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் எண்ணம் துளி கூட இல்லை. மேகேதாட்டு விவகாரத்தில் நாம் சேர்ந்து கொண்டுவந்த தீர்மானத்தை பிரமரிடம் நேர்முக கடிதமாக அளித்துள்ளோம். அதோடு அப்படியே இருந்துவிட வில்லை. மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் மேகேதாட்டு அணை பற்றி முழுவிவரங்களை குறிப்பிடவில்லை என தெரிந்ததும், காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் விவரங்களை குறிப்பிட்டு அடுத்த நாளே பிரதமருக்கு நேர்முக கடிதம் எழுதினோம்.

எனவே காவிரி நதிநீர், மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக அரசின் உரிமையை நாம் விட்டுத்தர மாட்டோம். கர்நாடகாவில் சில அணைகள் கட்ட ஆரம்பித்தபோது இதே அவையில் 1969ம் ஆண்டு விவாதம் நடந்துள்ளது. அப்போது நீர்வளத்துறை அமைச்சராக இருந்தது யார்? அப்போது அணை கட்ட விட்டது ஏன் என்று கேட்டு மலிவான அரசியல் செய்ய விரும்பவில்லை. காவிரி விவகாரத்தை மிக கவனமாக கையாள வேண்டும். சட்டப்படி இந்த விவகாரத்தை அணுகுவதில் உறுதியாக உள்ளோம். இருந்தாலும் ஒரு முயற்சி எடுப்போம் என நினைத்துதான் பெங்களூரு செல்ல முடிவெடுத்தேன்.

அந்த பயணம் பற்றி யோசித்து கேட்டது நான் தான். நான் கர்நாடக செல்ல முயற்சித்ததற்கு காரணம், இப்போது பகை நாடுகளே பிரச்சினைகளை பேசித்தீர்க்க பார்க்கிறார்கள். அப்படி இருக்கையில், பக்கத்து மாநிலத்தோடு பேசிப் பார்த்தால் என்ன என்று இந்த முடிவை எடுத்தேன். இதில் ஒருவேளை ஏதேனும் அவமானம் நேர்ந்தால், தமிழக மக்களுக்காக அதையும் தாங்க தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்.

குறுவை சாகுபடிக்கு நிவாரண தொகுப்பு ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். அரசியலே நாங்கள் தான் என சொல்லிக்கொள்பவர்களுக்கு இது எப்படி தெரியாமல் போனது எனத் தெரியவில்லை. பேப்பர் படித்திருந்தால் இது தெரிந்திருக்கும்" என்றார்.

அதன்பின்னர் உரையை தொடர்ந்த உதயநிதி ஸ்டாலின், " குறுவை தொகுப்பு திட்டம் என்பது எல்லா அரசுகளும் கொடுப்பதுதான். இப்போது வறட்சி நிவாரணம் கேட்கிறார்கள். இதற்கான வித்தியாசத்தை தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பேப்பர் படித்தால் மட்டும் போதாது. அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி, விவசாயிகளிடம் கலந்து பேசி கோரிக்கைகளை தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

## "நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பி கருணாநிதி" 8ம் ஆண்டு நினைவு நாளையொட்டி ஸ்டாலின் புகழாரம்



சென்னை: ஆக.8-

"அரசின் எண்ணற்ற கோப்புகளில் கையெழுத்திட்டு, தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றியவர். நவீனத் தமிழகத்தை உருவாக்கிய சிற்பி" என தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "எண்பது ஆண்டுகாலப் பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர். அரைநூற்றாண்டு காலம் ஒரு பேரியக்கத்தின் தலைவர். ஐந்து முறை தமிழகத்தின் முதல்வர். 13 முறை சட்டமன்ற உறுப்பினர். தமிழகத்தின் முதல்வராக அதிக ஆண்டுகள் பணியாற்றியவர்.


அரசின் எண்ணற்ற கோப்புகளில் கையெழுத்திட்டு, தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றியவர். நவீனத் தமிழகத்தை உருவாக்கிய சிற்பி. அரசியலும் ஆட்சியும், கலையும் இலக்கியமும், திரையும் நாடகமும், சின்னத்திரையும் சமூக வலைத்தளமும் என அனைத்துத் தளங்களிலும் கோலோச்சிய நிரந்தரத் தமிழ் ஆளுமை.

கருப்புக் கண்ணாடியும் கரகரத்த குரலுமாய் நம் நினைவுகளில் நிலைத்திருக்கும் தலைவர் கருணாநிதி, உடலால் விலகி நம் உள்ளங்களில் நிரந்தரமென நிறைந்த நாள் இன்று. அவர்தான் நமக்கு எல்லாம். அவரின்றி நாம் இல்லை." என தெரிவித்துள்ளார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் (10.08.2026) அன்று தேசிய குடற்புழு நீக்க நாள் கடைபிடித்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

## "கர்நாடகாவிடம் இருந்து காவிரி நீரை பெறுவது பெரும் சவால்" பேரவையில் அமைச்சர் ஆனந்த் விளக்கம்



சென்னை: ஆக.8-

"மாத வாரியாக கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை பெறுவது பெரும் சவாலாக உள்ளது. காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து தவெக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது" என சட்டப்பேரவையில் தமிழக நீர்வளத் துறை அமைச்சர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

காவிரி மற்றும் மேகேதாட்டு விவகாரம் குறித்து சட்டப்பேரவையில் விளக்கம் அளித்த அமைச்சர் ஆனந்த், "காவிரி நீர் உயிர் ஆதாரமாக உள்ளது. காவிரி நீர் டெல்டா மாவட்டங்களின் விவசாய ஆதாரமாகவும், மற்ற மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாகவும் உள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு ஆணைகள் மூலம் தமிழகத்தின் உரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது. இருந்தாலும், மாத வாரியாக கர்நாடகாவிலிருந்து தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை பெறுவது பெரும் சவாலாக உள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த தமிழக முதல்வரால் கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டு, அதற்கான நாள் ஆகஸ்ட் மாதம் 3ம் தேதி என முடிவு செய்யப்பட்டது.

அதற்கிடையில் கர்நாடக முதல்வர் அந்த நாள் பேச்சுவார்த்தைக்கு உகந்த நாள் அல்ல என்றும், வேறு ஒரு நாளில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் கூறியதால், குறிப்பிட்ட நாளில் அந்த பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. ஜூலை 28 அன்று நடைபெற்ற 139வது காவிரி நதி நீர் முறைப்படுத்தும் குழு கூட்டத்தில், தமிழ்நாடு தனது உரிமையை வலியுறுத்தியது.

இதன்மூலம், 29.07.2026 முதல் 12.08.2026 வரை வினாடிக்கு 3500 கன அடி வீதம் மொத்தம் 4.536 டி.எம்.சி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடும்படி, கர்நாடக அரசுக்கு காவிரி ஒழுங்காற்று ஆணையம் அறிவுறுத்தியது.

ஆனால், கர்நாடகாவுக்கு அறிவுறுத்தலின் பேரில் நீரை அளித்தாலும், பற்றாக்குறை காரணமாக விகிதாசார பங்கீட்டில் 5.379 டி.எம்.சி பற்றாக்குறை இருக்கும் என தமிழ்நாடு சுட்டிக்காட்டியது. இருப்பினும் 30.07.2026 அன்று நடந்த காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 54வது கூட்டத்தில், குழுவின் முடிவை ஆணையம் உறுதி செய்தது.

எனினும் கர்நாடக அரசு இதனை முழுமையாக செயல்படுத்தவில்லை. 29.07.2026 முதல் 02.08.2026 வரை 3,500 கன அடி கிடைக்க வேண்டிய இடத்தில், 144 முதல் 619 கன அடி வரை மட்டுமே கிடைத்தது. இதனால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருந்த பற்றாக்குறை மேலும் அதிகரித்தது.

எனவே 12.08.2026க்குள் நீர் வந்து சேருமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிடவும், 01.06.2026 முதல் 28.07.2026 வரை உள்ள நிலுவை நீரை உடனடியாக திறந்து விடவும், பற்றாக்குறை விகிதாசார அளவை ஈடுசெய்யவும் தமிழ்நாடு அரசு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தியது.

தமிழக முதல்வர் அறிவுறுத்தலின்படி, 03.08.2026 அன்று உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழக நீர்வளத்துறை செயலாளர், காவிரி மேலாண்மை ஆணைய தலைவருக்கு 03.08.2026 அன்று எழுதிய கடிதத்தில், 31.07.2026 முதல் கர்நாடகாவின் நான்கு அணைகளுக்கு வரும் நீர் அளவு கணிசமாக அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தமிழகத்துக்கான விகிதாச்சார பங்கீட்டை மறுபரிசீலனை செய்து 12.08.2026க்குள் 26.594 டிஎம்சி நீர் வந்து சேரும் வகையில் கர்நாடக அரசுக்கு உத்தரவிடவும் கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார். மேட்டூர் அணையில் இருந்த குறைவான நீர்வரத்து காரணமாக ஜூன் 12ல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை.

தென்மேற்கு பருவமழை 04.06.2026 அன்று தொடங்கிய போதிலும், மழைப்பொழிவு வழக்கத்தை விட குறைவாக இருந்ததால், கர்நாடக அணைகளுக்கான நீர்வரத்து குறைவாக இருந்தது.

கர்நாடக அணைகளில் தற்போது நீர் வரத்து அதிகரித்துள்ள போதிலும், 06.08.2026 காலை நிலவரப்படி தமிழ்நாடு பெற்றுள்ள மொத்த நீர் 4.947 டி.எம்.சி மட்டுமே. காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின்படி நமக்கு கிடைக்க வேண்டிய நீரில் 41.412 டி.எம்.சி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க நிர்வாக, சட்டரீதியாக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீர்வரத்து, குடிநீர் பாதுகாப்பு போன்ற சூழலை கருத்தில்கொண்டு பாசனத்துக்கு மேட்டூர் அணையை திறப்பது குறித்து முடிவுசெய்யப்படும்

காவிரி விவகாரம் மற்றும் மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக முதல்வர் பிரதமருக்கு இரு முறை நேர்முக கடிதம் எழுதியுள்ளார். இதற்கான சட்டப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் தலைமையிலான தவெக அரசு, காவிரி விவகாரத்தில் உரிய கவனம் செலுத்தி தமிழ்நாட்டின் உரிமையை சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது" என்றார்.





# பம்மலில் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மலர் அஞ்சலி செலுத்தி மாபெரும் அன்னதானம்

பம்மல், ஆக்.8-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் பம்மல் இரட்டை பிள்ளையார் கோவில் அருகில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் முன்னாள் முதல்வர் கழகத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மாபெரும் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பகுதி கழக நிர்வாகிகள். பகுதி செயற்குழு உறுப்பினர்கள். மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள். மாமன்ற உறுப்பினர்கள். வட்டக் கழகச் செயலாளர்கள். வட்ட கழக நிர்வாகிகள். வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள். BLO2,B-DA,BYA.க்கள். மூத்த முன்னோடிகள் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்





# அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா, பால்குடம் எடுத்தல்

மாதவரம், ஆக.8-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி ஆலய நிர்வாக குழுவினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்திற்கு சென்றடைந்தனர்.பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்தனர்.இதணைத்தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# திருவள்ளூர் அருகே காக்கலூரில் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி 8ம் ஆண்டு நினைவுவேந்தல் நிகழ்ச்சி

திருவள்ளூர், ஆக.8-

திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் திமுக ஒன்றிய செயலாளருமான R.ஜெயசீலன் தலைமையில் அக்கட்சியினர் முன்னாள் முதல்வரும் திமுக கட்சியின் முன்னாள் தலைவருமான முத்தமிழ் அறிஞர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்கள்

# உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான பொது மக்கள் குறைதீர்கூட்டம்

தேனி, ஆக.8-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது. பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும் மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும் மாதந்தோறும் நடத்தப்படும் உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான பொது மக்கள் குறைதீர்கூட்டம் (Civil Supplies Grievance meeting) மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் இம்மாதம் இரண்டாவது சனிக்கிழமை 08.08.2026 அன்று நடைபெற உள்ளது. அதன்படி, தேனி மாவட்டத்தில் ஆகஸ்ட் 2026–ஆம் மாதத்தில் 08.08.2026 அன்று பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் கூட்டம் நடத்திட தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள் மற்றும்மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் விவரம் பின்வருமாறு:வ.எண்வட்டம்முகாம் நடக்கும் கிராமம்கடை எண் முகாம் நடக்கும் இடம்மேற்பார்வையாளராக நியமனம் செய்யப்படும்துணை ஆட்சியர்கள் 1. பெரியகுளம்இலட்சுமிபுரம் கிராமம்23BP-012PNஇலட்சுமிபுரம் கிராம நியாயவிலைக்கடை ஜெ.கவிதா,தனித்துணை ஆட்சியர் தேனி .வருவாய் கோட்டாட்சியர்(பொ) பெரியகுளம்2.தேனிநாகலாபுரம் கிராமம் 23AP-026PYநாகலாபுரம் கிராமநியாயவிலைக்கடை ரெ.சுரேஷ்குமார்மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சிறுபான்மையினர் நலஅலுவலர், தேனி.3.ஆண்டிபட்டி எரதிமக்கால்பட்டி கிராமம்23CB031PNஎரதிமக்கால்பட்டி கிராமநியாயவிலைக்கடைபஞ்சாபகேச ன்உதவிஆணையர் (கலால்) தேனி.4.உத்தமபாளையம்மேலக்கூடலூர் தெற்குகிராமம்23DE025P-Nமேலக்கூடலூர் தெற்கு கிராமம் லோயர்கேம்ப் (பளியன்குடி) நியாய விலைக் கடைஜ.சையது முகைதீன் இப்ராஹிம்,வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம் 5.போடிநாயக்கனூர்அம்மாபட்டி கிராமம்23EP-023PYஅம்மாபட்டி கிராம நியாயவிலைக்கடைநல்லையாமாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், தேனி. இக்குறைதீர் முகாமில் பொதுமக்கள் பொது விநியோக கடைகள் சம்பந்தமான குறைபாடுகள் குறித்தும், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் மற்றும் கடை மாற்றம் குறித்தும் மனு செய்யலாம். பொதுமக்கள் தங்கள் குறைகளை முன்கூட்டியே சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் நியாய விலைக்கடை நடத்தும் நிறுவன அலுவலர்களுக்கு மனு மூலமும் தெரிவிக்கலாம். முன்கூட்டியே பெறப்படும் புகார்கள் மற்றும் குறைபாடுகள் வகைபாடு வாரியாக பிரிக்கப்பட்டு உடனுக்குடன் அவை தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முகாம் நாள் அன்று பொதுமக்களுக்கு நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும். மேலும், முகாம் நாள் அன்று பெறப்படும் புகார்கள், குறைபாடுகள் மீது 30.தினங்களுக்குள் நடவடிக்கைமேற்கொண்டு பதில் தரப்படும். எனவே, பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.






■ முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8 ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி குன்னூர் அருகே எடப்பள்ளி கிராமத்தில் நீலகிரி மாவட்ட திமுக பொதுக்குழு உறுப்பினர் யி.காளிதாசன் மற்றும் திமுக உறுப்பினர்கள் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்





■ நீலகிரி மாவட்டம் ஜெகதளா பேரூர் கழகத்தின் சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாவது நினைவு நாள் நிகழ்ச்சி அரவங்காடு மெயின் கேட் பகுதியில் நடைபெற்றது. பேரூர் கழக அவைத் தலைவர் லியோனி தலைமையில் பேரூர் கழகச் செயலாளர் சஞ்சீவ்குமார் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வெங்கடேஷ் மாவட்ட பிரதிநிதி தினகரன் வில்லியம் ஆல்பர்ட் பேரூர் கழக துணை செயலாளர் சானவாஸ் கிருஷ்ணகுமார் முபாரக் ஒசட்டி பாஷா ஜார்ஜ்,,எட்வர்ட் ஜார்ஜ் கண்ணன் ராமசாமி கேசவ மூர்த்தி என்கிற பாபு விக்னேஷ் தினகரன் கவுன்சிலர்மோசஸ் கவுன்சிலர் ஷாலினி மற்றும் பல கழக நிர்வாகிகள் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்தினார்கள் இந்நிகழ்ச்சியை கிளைக் கழக செயலாளர் மூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்



# தேனியில் சிறப்பு முகாம்

தேனி, ஆக.8-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்2013இன்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அத்தியாவசியப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டு, முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டை வைத்துள்ள குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டையில் உள்ள அனைத்து நபர்களின் ஆதார் விபரங்களை சரிபார்ப்பதற்காக, கைவிரல் ரேகை/ கருவிழி பதிவின் மூலம் உறுதி செய்யும் (e-KYC) பணி நடைபெற்று வருகிறது. எனவே, மேற்படி e-KYC பணியினை 100% நிறைவு செய்யும் பொருட்டு 08.08.2026 மற்றும் 09.08.2026 ஆகிய இரு தினங்கள் தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. இதனையொட்டி, நமது மாவட்டத்தில் இதுவரை கைரேகைப் பதிவு செய்யாத

அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கீழ்தளத்தில் தேசிய கைத்தறி தினத்தையொட்டி நடைபெற்ற கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப், குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். உடன் உதவி ஆட்சியர் பயிற்சி ர.மோனிகா, உதவி இயக்குநர் கைத்தறி ஜெயசுதா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அகில இந்திய பட்டியலின இளைஞர் சங்கம் மாவட்ட ஆட்சியரிடம் மனு

நாகர்கோவில், ஆக.8-


கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாவட்ட ஆட்சியரிடம் நேற்று அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை க்கு வருவாய்துறை நிலை ஆணை 24 கி ன் படி அரசுக்கு சொந்தமான நிலம் அல்லது கட்டிடம் வழங்க கேட்டு மாநில பொதுச் செயலாளர் குப்புசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது :

அகில இந்திய பட்டியல இளைஞர் பேரவை என்பது அரசியல் சார்பற்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் பற்றிய சமூக மக்களிடையே கல்வி பொருளாதாரம் சுகாதாரம் தீண்டாமை ஒழிப்பு பெண்ணுரிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி பட்டியல் சமூக மக்களும் மற்ற சமூக மக்களை போல சமநிலைக்கு கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தில் அகில இந்திய பட்டியலான இளைஞர் பேரவை 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு டெல்லி தளவீடமாகக் கொண்டு இந்தியா முழுவதும் செயல்பட்டு வருகிறது மேற்படி பேரவை ஆனது சங்கங்களின் பதிவு சட்டம் 1860 ன் படி பதிவு செய்யப்பட்ட அமைப்பாகும் மேலும் இந்திய அரசின் உள்த்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய வகுப்பு வாத நல்லினக்க அறக்கட்டறையால் இணைக்கப்பட்டதாகும் , மேலும் குமரி மாவட்டத்தில் எங்களது பேரவை பொறுப்பாளர்கள் மக்களுடன் இணைந்து சமூகப்பணியாச்சி வருகிறார்கள் மேற்படி பேரவைக்கு சொந்தமாக நிலம் அல்லது கட்டிடம் இல்லை அதனால் மக்களுக்கு மற்றும் மாணவ மாணவிகளுக்கு கல்வி மற்றும் சுய தொழில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அளிப்பதற்கு தனியார் இடங்களை நாட வேண்டியுள்ளது அதில் மிகுந்த சிரமம் உள்ளதால் சமூகம் அவர்கள் கனிவோடு பரிசினை செய்து நாகர்கோவில் மாநகர் பகுதியில் அரசுக்கு சொந்தமான கட்டிடம் அல்லது நிலம் தற்போது நாகர்கோவில் டென்னிசன் சாலையில் உள்ள பழைய முன்னாள் வட்டார வளர்ச்சி ஆசிரியர் அலுவலகம் தற்போது பயன்பாட்டில் இல்லை சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தாததால் பழுதடைந்துள்ளது அதனை எங்களுக்கு வழங்க வேண்டுகிறோம் அல்லது பழைய அரசு மருத்துவமனை கோட்டார் அருகில் காலியாக உள்ள இடத்தை கட்டிடம் கட்டி வழங்க கேட்டுக் கொள்கிறோம் என்று அவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனு வில் கூறப்பட்டுள்ளது . உடன் மாநில தலைவர் அய்யாசாமி, மாநில செயல் தலைவர் வெற்றிவேல், மாரியா பொருளாளர் ஜெயராமன், மாநில இணைச்செயலாளர் சரவணகுமார், மாவட்டத் தலைவர் கண்ணன், மாவட்ட செயலாளர் கி. குமரேசன், மாவட்ட பொருளாளர் குணசேகர் உட்பட நிர்வாகிகள் பல கலந்து கொண்டனர்.





## குடியானம்குப்பம் அருள் பாலித்து வரும் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி ஆலய ஆடி கிருத்திகை பெருவிழா



ஜோலார்பேட்டை, ஆக.8-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை குடியானம் குப்பத்தில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி ஆலய ஆடி கிருத்திகை பெருவிழா ஆடி மாதம் 21 ஆம் நாள் 682026 அன்று வழக்கறிஞர் பழனி தலைமையில் விமர்சையாக நடைபெற்றது. காலை ஏழு முப்பது மணிக்கு மங்கள வாத்தியத்துடன் சிறப்பு அபிஷேக பூஜைகள் நடைபெற்று விநாயகர் ஆலயத்தில் இருந்து மேளதாளத்துடன் பம்பை வாத்தியங்களுடன் பால்குடம் காவடி ஏந்தி தேர் ஊர்வலம் வந்து மகா பாலபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக்கு மகா சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டு சோடச உபச்சாரங்கள் நடைபெற்றது. பக்த கோடிகள் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி அவர்களின் அருளாசி பெற்று சென்றனர். வந்திருந்த அனைத்து பக்த கோடிகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆலய ஸ்தாபகர் ஆலய அர்ச்சகர் ஊர் பொதுமக்கள் பக்த கோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 8ம் ஆண்டு நினைவுநாள்

கிருஷ்ணகிரி, ஆக.8-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பழைய பேரூராட்சி அலுவலக கட்டிடம் அருகே, மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன், நகர செயலாளர் ஜே கே எஸ் பாபு ஆகியோர் தலைமையில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் பேரூராட்சி துணைத் தலைவர் மாலினி மாதையன், முன்னாள் பேரூர் கழகத் தலைவர் சாஜித், பாபா மாதையன், பாரதிராஜா, ராஜன் மேலும் காவேரிப்பட்டணம் பேருந்து நிலையம் அருகே மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்பிரமணி, கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன் ஆகியோர் தலைமையில் தனித்தனியாக திமுக தொண்டர்களுடன் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கோமதியம்மன் நகர் ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்தில் பால்குடம் எடுத்தல்

மாதவரம், ஆக.8-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 19ம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் தலைவர் விஜேந்திரன், செயலாளர் செந்தில் குமார், பொருளாளர் சென்னவராயபெருமாள். துணைத்தலைவர்கள் வெங்கடேசன், விநாயகம், துணைச்செயலாளர்கள் வெங்கடேசன், சுரேஷ், ஆலய ஆலோசகர்கள் சுப்பிரமணி, சங்கர், ஆலய கௌரவ நிர்வாகிகள் லோகநாதன், சரவண மூர்த்தி.சசிதரன் உட்பட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள். கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அத்திவாக்கம் கோட்டூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லாத்தம்மன் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 3 க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகாத்தம்மன் ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் ஆலயத்திற்கு சென்றடைந்தனர்.பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்று வட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## கருணாநிதி நினைவு நாளையொட்டி கிருஷ்ணகிரியில் தி.மு.க. அமைதி பேரணிசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை; 5,000 பேருக்கு அன்னதானம்





கிருஷ்ணகிரி, ஆக.8-

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று அமைதி பேரணி நடைபெற்றது. தொடர்ந்து கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன், 5,000 பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி சென்ட்ரல் தியேட்டர் எதிரில் தொடங்கிய அமைதி பேரணிக்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். பேரணி பெங்களூரு சாலை, பி.எஸ்.என்.எல். அலுவலகம், ராயக்கோட்டை சாலை வழியாக ராயக்கோட்டை மேம்பாலம் அருகே உள்ள கருணாநிதி சிலையை வந்தடைந்தது. அங்கு மாவட்ட செயலாளர் டி. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் செங்குட்டுவன், நரசிம்மன், கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு, சங்கர் தர்மன்,பொதுக்குழு உறுப்பினர் கிருபாகரன், ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இதனைத் தொடர்ந்து நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியை டி. மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். மேலும் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கருணாநிதியின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. ராயக்கோட்டை மேம்பாலம் அருகே சுமார் 5,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவடைந்தது.



## மண்ணிவாக்கத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர்

பம்மல், ஆக.8-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட மண்ணிவாக்கம் கூட்ரோடில் திமுக சார்பில் காட்டாங்குளத்தூர் ஒன்றிய கழகச் செயலாளர் எம்டி லோகநாதன் தலைமையில் முன்னாள் முதல்வர் கழகத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஊராட்சி மன்ற தலைவர் கஜலட்சுமி சண்முகம், துணை தலைவர் சுமதி லோகநாதன், காட்டாங்குளத்தூர் இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக், மற்றும் காட்டாங்குளத்தூர் ஒன்றிய கழகச் நிர்வாகிகள் மண்ணிவாக்கம் ஊராட்சி கழக நிர்வாகிகள் வார்டு உறுப்பினர்கள் மூத்த முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்கள்



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.8-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு

திருப்பத்தூர், ஆக.8-

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குரிசிலாப்பட்டு ஊராட்சி, தளுகன்வட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பள்ளி மதிய உணவுத் திட்டத்தின் கீழ் (2026 27), ரூ.7.56 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமையலறைக் கட்டிட கட்டும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (06.08.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி செயற்பொறியாளர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேந்திரன், கணேசன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



## விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் முன்னாள் தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி நாள் அனுசரிப்பு

மாதவரம், ஆக.8-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் மறைந்த தமிழ்நாடு முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 8ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனைபடி நடைபெற்றது. நிகழ்ச்சியில் முன்னாள் புழல் ஒன்றிய திமுக செயலாளர் பெ.சரவணன் மற்றும் முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பாரதிசரவணன் ஆகியோர் தலைமை ஏற்று மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.இதில் திமுக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## கருப்புப் பட்டை அணிந்து அரசு செவிலியர்கள் கவன ஈர்ப்பு போராட்டம்




கிருஷ்ணகிரி, ஆக.8-

தமிழக அரசு செவியலியர்கள் மற்றும் செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், 06.08.2026 முதல் 08.08.2026 இன்று வரை கருப்புப் பட்டை அணிந்து, தினமும் காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை தங்களது நியாயமான கோரிக்கைகளை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் கவன ஈர்ப்பு குரல் எழுப்பும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்தப் போராட்டம் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் நடத்தப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் செவிலியர்கள் தங்களது பணிகளை வழக்கம்போல் மேற்கொண்டு, கருப்புப் பட்டை அணிந்து மட்டுமே தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகள்: Re-Deployment ஆட்குறைப்பு தொடர்பான அரசாணை எண் 204ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும். தொகுப்பூதிய முறையை முழுமையாக ரத்து செய்து, தொகுப்பூதியத்தில் பணிபுரியும் அனைத்து செவிலியர்களையும் உடனடியாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும். Staff Nurse என்ற பதவி பெயரை Nursing Officer என மாற்றி, செவிலியர்களுக்கான Job Description தொடர்பான அரசாணையை உடனடியாக வெளியிட வேண்டும்.செவிலியர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழக அரசு உடனடியாக பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசு நர்சுகள் சங்கம் மற்றும் செவிலியர் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இப்போராட்டத்தில் அரசு நர்சுகள் சங்கத்தைச் சேர்ந்த செவிலியர்கள் தனலட்சுமி, ஸ்ரீதேவி, பாலமுருகன், பிரபு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித்.பொதுமக்களுக்கு விடுக்கும் செய்தி

திருப்பூர், ஆக.8-

திருப்பூர்.மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களால் மாநகராட்சிக்கு செலுத்தப்படும் வரித்தொகையை பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்கள், கட்டுமானப்பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகள் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகின்றன என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் அதன் கீழான விதிகள் 2023 ஆகியவற்றின்படி செலுத்த வேண்டிய வரித்தொகை உரிய காலத்திற்குள் மாநகராட்சிக்கு செலுத்தப்படாததால், மேற்காண் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்படுவதில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. எனவே, வரிதா ரர்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினை தாமதமின்றி உடனடியாக செலுத்தி, மாநகராட்சியின் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதில் உறுதுணையாக இருக்கவும், வரி செலுத்தாத காரணத்திற்காக எடுக்கப்படும் ஜப்தி நடவடிக்கை உள்ளிட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உள்ளாகாமல் தவிர்க்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை மைய அலுவலக கணிணி வரி வசூல் மையம், நான்கு மண்டல அலுவலகங்கள், செட்டிபாளையம், தொட்டிபாளையம், நெருப்பெரிச்சல், மண்ணரை, குமரன் வணிகவளாகம், முத்தணம் பாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம் மற்றும் பாண்டியன் நகர், ஆகிய கணிணி வரி வசூல் மையங்களில் பணமாகவோ அல்லது “ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி” என்ற பெயரில் காசோலை/ வரைவோலை மூலமாகவோ வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம். மேலும் எளிய முறையில் கீழ்கண்ட இனையதளம் வழியாகவும் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம்.Use “Quick Payment” or “Register & Login” tohttps://tnurbanepay.tn.gov.in கைபேசியில் ஜிபே, போன்.பே மற்றும் பே.டி.எம் செயலிகள் மூலமாகவும், வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தலாம். திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான கலைஞர் பேருந்து நிலைய கடைகள் மற்றும் பல்லடம் சாலை வாரசந்தைபேட்டை கடைகளுக்கு வாடகை நிலுவை வசூல் பணிகள் தீவிரமாக மாநகராட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், நீண்ட காலமாக மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் காலம் கடத்தி வந்த வியாபாரிகளின் கடைகள், மாநகராட்சி அலுவலர்களால் அதிரடிய ாகப் பூட்டி சீல் வைக்கப்பட்டன. எனவே, மாநகராட்சி கடைகளை வாடகைக்கு எடுத்து நடத்தி வரும் வியாபாரிகள் அனைவரும், தங்களுடைய வாடகை நிலுவைத் தொகையை எவ்வித தாமதமுமின்றி உடனடியாகச் செலுத்தி, கடைகள் பூட்டி சீல் வைக்கப்படும் போன்ற தொடர் சட்ட நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்



# கல்லல் முருகப்பா பள்ளியில் ஹிரோஷிமா தினம் அனுசரிப்பு

சிவகங்கை, ஆக.8-

இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப் பட்டதன் நினைவாகவும், உலக அமைதியை வலியுறுத்தும் வகையிலும் சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் ஹிரோஷிமா தினம் அனுசரிக்கப்பட்டது. பள்ளியின் அறிவியல் மன்றம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அறிவியல் ஆசிரியரும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளருமான பிரபு, “உலகினை அழித்திடும் யுத்தமே வேண்டாம்” என்ற அறிவியல் பாடலுடன், அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.முதுகலை வரலாற்று ஆசிரியர் மோகன்ராசன், இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் மற்றும் ஜப்பான் சந்தித்த பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தார். ஆசிரியை உமாராணி, போரால் முடியாததை அகிம்சையின் மூலம் மகாத்மா காந்தி எவ்வாறு சாதித்தார் என்பது குறித்து பேசினார். ஆசிரியை உமா மாலினி, ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதற்கான காரணங்களை விளக்கினார்.தலைமை ஆசிரியர் அழகப்பன் தலைமையுரையாற்றி, அணுகுண்டு வீச்சினால் ஏற்பட்ட அறிவியல் ரீதியான பாதிப்புகளை விளக் ணகியதுடன், வருங்கால தலைமுறையினர் போர், சண்டை, சச்சரவு மற்றும் வன்முறை இல்லாத அமைதியான சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும் என வலியுறுத்தினார். நிகழ்ச்சியில் எட்டாம் மற்றும் ஒன்பதாம் வகுப்பு மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சதுரகிரி ஆடி அமாவாசையை முன்னிட்டு 2 நாட்கள் டாஸ்மாக் கடைகள் மூடல்!மாவட்ட ஆட்சியர் உத்தரவு




மதுரை, ஆக.8-

சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயிலில் ஆடி அமாவாசை திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடைகள் இரண்டு நாட்களுக்கு மூடப்பட உள்ளன. மதுரை மாவட்டம் பேரையூர் வட்டத்திற்குட்பட்ட சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயிலில் ஆடி அமாவாசை திருவிழா வருகிற 10ம் தேதி முதல் 13ம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி, சாப்டூர் மற்றும் எம்.கல்லுப்பட்டி காவல் சரக எல்லைகளில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வடகரைப்பட்டி (கடை எண் 5531, 5541), அத்திப்பட்டி (5536), எம்.பெருமாள்பட்டி (5543), கூ.சாணார்பட்டி (5562) ஆகிய பகுதிகளில் செயல்படும் டாஸ்மாக் கடைகள் (FL1) மற்றும் டென்றல் ரிக்ரியேஷன் கிளப் (FL-2) ஆகியவை ஆகஸ்ட் 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்கள் முழுமையாக மூடப்படும்.

இந்த நாட்களில் மதுபான விற்பனை அல்லது விதிமீறல்கள் எதுவும் நடைபெறாத வகையில் அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட இரண்டு பெண்மணிகள் ஆதரவற்று திரிந்த நிலையில் இதனை கண்டறிந்த அகில இந்திய மக்கள் நலக் கழக ம் மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் பி.சதீஸ் தகவல் தெரிவித்து. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். ஸி.ஸ்டாலின் நிமிர் குழு, மற்றும் நாம் ஒருவர் அறக்கட்டளை உதவியோடு கன்னியாகுமரி பகுதியில் அமைந்துள்ள ஸ்மைல் முதியோர் இல்லத்தில் பாதுகாப்பாக சேர்த்தனர். மாவட்ட காவல் துறையும் சமூக சேவையில் ஈடுபடும் நாம் ஒருவர் அறக்கட்டளை மற்றும் அகில இந்திய மக்கள் நலக் கழகம் இவர்களின் செயல் பொதுமக்களிடையே மிகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது...



# ஆக்கிரமிப்பு அகற்ற அதிரடி உத்தரவு!பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் - மீறினால் அபராதம்: மாநகராட்சி கமிஷனர் எச்சரிக்கை



மதுரை, ஆக.8-

மதுரை மாட்டுத்தாவணி எதிர்புறத்தில் செயல்பட்டு வரும் உணவகங்களில் மாநகராட்சி ஆணையாளர் கவுரவ் குமார், இ.ஆ.ப., திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பகுதிகளை நேரில் பார்வையிட்ட ஆணையாளர், அவற்றை உடனடியாக அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.மேலும், சில உணவகங்களில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளில் உணவுப் பொருட்கள் பொதி செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதை கண்டறிந்த அவர், அந்த பிளாஸ்டிக் பைகளை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுத்தார். இனியும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தினால் கடும் அபராதம் விதிக்கப்படும் என உணவக உரிமையாளர்களை எச்சரித்தார். இதனைத் தொடர்ந்து, மாட்டுத்தாவணி எதிர்புற இருசக்கர வாகன நிறுத்துமிடத்தையும் பார்வையிட்டு, அதற்கான உரிமம் மற்றும் புதுப்பிப்பு தொடர்பான விவரங்களை ஆய்வு செய்தார்.இந்த ஆய்வில் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ரூ.1.20 லட்சம் உதவியில் ரூ.12 லட்சம் ஆண்டு வருவாய்!மகளிர் தொழில்முனைவோரின் ஆடை நிறுவனத்தை கலெக்டர் பாராட்டு



மதுரை, ஆக.8-

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்திற்குட்பட்ட மேலக்கோட்டை ஊராட்சியில் செயல்பட்டு வரும் 'செம்பருத்தி' மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த தனிநபர் தொழில்முனைவோர் ஷைலி ஷைனி ஜாய் நடத்தி வரும் ஆடை தயாரிப்பு நிறுவனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கிராமப்புறத் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (SVEP) மூலம் சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.40 ஆயிரமும், சுய உதவிக்குழு மூலம் ரூ.80 ஆயிரமும் பெற்ற கடனுதவி குறித்து கேட்டறிந்தார். மேலும், ஆடைகளுடன் சுற்றுச்சூழலுக்கு உகந்த துணிப்பைகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருவது குறித்து ஆய்வு செய்தார். அத்துடன், நிதியுதவிக்குப் பிறகு நிறுவனத்தின் உற்பத்தி கணிசமாக அதிகரித்து, ஆண்டுக்கு ரூ.12 லட்சத்துக்கும் மேல் விற்றுமுதல் பெற்று, மாதந்தோறும் ரூ.1 லட்சத்துக்கும் அதிகமான வருவாய் ஈட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் விரிவாக கேட்டறிந்தார். தொடர்ந்து, தொழிலை மேலும் விரிவுபடுத்தவும், உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் மற்றும் துணிப்பைகளை அதிகளவில் சந்தைப்படுத்தவும் தேவையான ஆலோசனைகளை வழங்கிய அவர், சிறப்பாக செயல்பட்டு வரும் தொழில்முனைவோர் ஷைலி ஷைனி ஜாயை பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் திட்ட இயக்குநர் சுரேஷ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




# கலைஞர் நினைவு நாள் அனுசரிப்பு

மதுரை, ஆக.8-

மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் முன்னாள் அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநகர் மாவட்ட திமுக செயலாளர் தளபதி ஆகியோர் தலைமையில் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் கல்லூரியில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு சிம்மக்கல் கலைஞர் சிலையை வந்தடைந்தது தொடர்ந்து கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்நிகழ்வில், தலைமைச் செயற்குழு பொதுக்குழுஉறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள்மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர்அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மை யினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர்அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்துஅணியினரும் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்தினர்.



■ டாஸ்மாக் தொழிலாளர்கள் தங்களது பல கோரிக்கைகளை வலியுறுத்தும் விதமாக டாஸ்மாக் அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அணைத்து மதுக்கடைகளையும் அடைத்து மாபெரும் கவன ஈர்ப்பு மற்றும் உள்ளிருப்பு போராட்டம் கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன்புதூரில் உள்ள டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகம் முன்பு நடைபெற்று வருகிறது அதிகாரிகள் பேச்சுவார்த்தை.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் (10.08.2026) அன்று தேசிய குடற்புழு நீக்க நாள் கடைபிடித்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# 3 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை

கோவை, ஆக.8-

தேனி, நீலகிரி ஆகிய 3 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மேலும், சென்னையில் இன்று மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161